## இலங்கை மின்சார சபை – 2016

----------------------------------------------------

இலங்கை மின்சார சபை ("சீஈபீ") மற்றும் சீஈபீயினதும் அதன் துணைக் கம்பனிகளினதும் ("குழு") 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றுக்கள் மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்றுக்கள், உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றுக்கள், காசுப்பாய்ச்சல் கூற்றுக்கள் மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுடிற்கான நிதிக்கூற்றுக்களும் ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1969 இன் 31 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தினால் திருத்தப்பட்ட 1969 இன் 17 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை அதிகாரச்சட்டத்தின் 49(4) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. வரையறுக்கப்பட்ட லங்கா கோல் (தனியார்) கம்பனி தவிர்ந்த துணைக் கம்பனிகளின் நிதிக்கூற்றுக்கள் உரிய துணைக் கம்பனிகளின் பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்பட்ட பொதுத் தொழிலிலுள்ள பட்டயக் கணக்காளர் நிறுவனங்களால் கணக்காய்வு செய்யப்பட்ட அதேநேரம் வரையறுக்கப்பட்ட லங்கா கோல் (தனியார்) கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க (எல்கேஏஎஸ்/எஸ்எல்எவ்ஆர்எஸ்) தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை ("சபை") பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சீஈபீயின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சீஈபீயின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. சபையினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் சபையினால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13

ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் சீஈபீயினதும் அதன் குழுவினதும் நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வரையறுக்கப்பட்ட திருகோணமலை மின்வலு கம்பனியானது பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு அதனுடைய நிதிக்கூற்றுக்கள் மீது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்தை வெளிப்படுத்துகின்றது.

கைவிடப்பட்ட சம்பூர் நிலக்கரி மின்வலுப் பொறி நிகழ்ச்சித்திட்டத்துடன் தொடர்புடைய ரூபா 328,109,272 தொகையான மூலதன நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேலையானது நிதிநிலைமைக் கூற்றில காட்டப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தது. ஏற்படக்கூடிய சாத்தியமான நட்டக்கழிவை மதிப்பிடுவதற்கு 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முகாமைத்துவத்தால் விரிவான நட்டக்கழிவு மதிப்பீடானது மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

இதற்கு மேலதிகமாக, பின்வரும் விடயம் சுட்டிக்காட்டப்படுகின்றது.

மீளாய்வாண்டின் போது கம்பனியானது சம்பூர் நிலக்கரி மின்வலு பொறி செயற்திட்டத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளை நிறுத்தியது. ஆகையால், கம்பனியின் இயலுமையானது தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவாக நீடிப்பது பற்றிய முக்கிய சந்தேகத்தை ஏற்படுத்தக்கூடிய பொருண்மையான நிச்சயமற்ற தன்மையின் உள்ளதன்மையை இது குறித்துக்காட்டுகின்றது.

(ஆ) வரையறுக்கப்பட்ட லங்கா கோல் (தனியார்) கம்பனியின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் மீதான முனைப்பழியுள்ள அபிப்பிராயமானது பின்வரும் விடயங்களை அடிப்படையாக கொண்டு வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

(i) நிதிக்கூற்றுக்களின் குறிப்புக்கள் 10 மற்றும் 14 இன் கீழ் காட்டப்பட்ட முறையே ரூபா 26,506,918 ரூபா 894,150 மற்றும் ரூபா 77,718 தொகையான முறையே பெறுமதி சேர் வரி (வற்), பொருளாதார சேவைகள் கட்டணம் (ஈஎஸ்சீ) மற்றும் பிடித்துவைத்தல் வரி தொடர்பான பெறவேண்டிய வரிகள் மற்றும் ரூபா 11,703,151, ரூபா 3,371,326 மற்றும் ரூபா 12,758,801 தொகையான வருமான வரி, தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி (எஸ்பீரி) மற்றும் பெறுமதி சேர் வரி தொடர்பான செலுத்த வேண்டிய வரிகளானது வரி கணிப்பீட்டு விபரங்கள் மற்றும் வரி வருமானம் போன்ற போதிய ஆவணச்சான்றின்மையால் திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடிந்திருக்கவில்லை.

அதற்கிணங்க, மீளாய்வாண்டிற்கான ஆரம்ப மீதிகளாக நிதிக்கூற்றுக்களின் குறிப்பு – 17 இன் கீழ் காட்டப்பட்ட ரூபா 65,474,540 கூட்டுத்தொகையான வருமான வரிப்பொறுப்புக்களானது உள்நாட்டு இறை வரித்திணைக்களத்தின் அறிக்கையில் காட்டப்பட்ட மீதியுடன் இணங்கியிருக்கவில்லை. மேலும், அத்தகைய பொறுப்பின் நம்பகத்தன்மை மற்றும் சரியானதன்மையினை கணிப்பீட்டு விபரங்கள் மற்றும் வரி வருமானங்கள் போன்ற தகவல் இன்மையால் கணக்காய்வில் சோதனை செய்திருக்க முடிந்திருக்கவில்லை.

(ii) கம்பனியின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வரையறுக்கப்பட்ட சிப்பிங் கூட்டுத்தாபன கம்பனிக்கு செலுத்த வேண்டிய தொகை ரூபா 170,378,808 ஆக இருந்த அதே நேரம், வரைறுக்கப்பட்ட சிலோன் சிப்பிங் கூட்டுத்தாபன கம்பனியிடமிருந்து பெறப்பட்ட உறுதிப்படுத்தல்களின் பிரகாரம் இது ரூபா 788,958,985 ஆக காட்டப்பட்டிருந்தது. ஆகையால், இந்த இரண்டு பதிவுகளிறகிடையிலும் ரூபா 618,580,177 இணக்கஞ் செய்யப்படாத வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. ஆகையால், இந்த மீதியின் உண்மைத்தன்மையை கணக்காய்வில் மதிப்பீடு செய்ய முடிந்திருக்கவில்லை.

இதற்கு மேலதிகமாக பின்வரும் விடயம் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

2013 செப்தெம்பர் 05 இல் இலங்கை மின்சார சபைக்கும் (சீஈபீ) கம்பனிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம், சர்வதேச சந்தையிலிருந்து நிலக்கரியை கொள்வனவு செய்வதும் (இலங்கை மின்சார சபை கம்பனியால் அதன் சொந்தப்பெயரின் திறக்கப்பட்ட நாணயக் கடிதத்திற்காக) செலுத்துகின்றது எந்த இலாப எல்லையும் பேணாமல் சீஈபீக்கு அதனை மீளவும் விற்பனை செய்வது கம்பனியின் பிரதான செயற்பாடு ஆகும். மேலும், கம்பனியால் உழைக்கப்பட்ட வேறு எந்த வருமானத்திற்கு (உ+ம் கம்பனியின் தேறிய மேந்தலைக் கிரயம்) எதிராக தீர்ப்பனவு செய்த பின்னர் மீதமாகவிருந்த கம்பனியின் அனைத்து செயற்பாட்டு செலவினங்களையும் சீஈபீ ஈடுசெய்யும் எனினும், கம்பனியானது மீளாய்வாண்டிற்காக தயாரித்த அதனுடைய நிதிக்கூற்றுக்களில் அதனுடைய பிரதான செயற்பாட்டிலிருந்து ஏற்பட்ட விற்பனை வருமானம், விற்பனைக் கிரயம், மற்றும் செயற்பாட்டு செலவினம் ஏனையவற்றை இணங்காண்பதற்கு தவறியது.

## 2.2.2 இலங்கை மின்சார சபையின் நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

---

### 2.2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (எல்கேஏஎஸ்/எஸ்எல்எவ்ஆர்எஸ்) மற்றும் கணக்கீட்டுக் கொள்கைகளுடனான இணக்கம்

---

(அ) சீஈபீயானது அதனுடைய மூலதன மற்றும் பராமரிப்பு வேலைகளிற்காக ஏற்பட்ட ஊழியர், மூலப்பொருள் மற்றும் மேந்தலைக் கிரயத்தை பெறுமதியிடுவதற்காக உண்மைக் கிரயங்களை பிரயோகிப்பதற்கு பதிலாக நியமக் கிரயங்களை பிரயோகிக்கின்றது. இதன் விளைவால், ரூபா 5,750,127,816 கூட்டுத்தொகையான பாதகமான விலை முரண், ஊழியர் மற்றும் மேந்தலை விகித முரண்களும் ரூபா 2,462,896,912 தொகையான சாதக விலை முரண்களும் பின்வரும் தாமதங்களுடன் கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருந்தது.

(i) இருப்புக்கள், நடைபெறும் வேலைகள் மற்றும் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை பெறுமதியிடுவதற்காக நியமவிலைகளை பிரயோகித்தல் என்பன முறையே ***எல்கேஏஎஸ் 2 - இருப்புக்கள் மற்றும் எல்கேஏஎஸ் 16 - ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்*** என்பவற்றின் ஏற்பாடுகளுடன் இணங்கியிருக்கவில்லை.

(ii) மூலதன வேலைகளுடன் தொடர்புடைய உயர் நிதிசார் ஈடுபாட்டால் சீஈபீயின் செயற்பாட்டு விளைவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் உரிமையாண்மை என்பன குறிப்பிடத்தக்களவு பாதிக்கப்பட்டிருந்தது. எனினும், அதனால் நிதிக்கூற்றுக்களிலேற்படும் தாக்கங்கள் மூலதன வேலைகள் தொடர்பான வேண்டப்பட்ட தகவல்கள் கிடைக்காமையினால் கணக்காய்வில் மதிப்பீடு செய்யப்பட முடிந்திருக்கவில்லை.

(ஆ) **எல்கேஏஎஸ் 39 - நிதிக்கருவிகளை இனங்காணல் மற்றும் அளவிடுதல்**:
ரூபா 6,970,878,902 கூட்டுத்தொகையாக உத்தியோகத்தர் கடன்பட்டோர்கள் நியமனத்தின் தேவைப்பாடுகளிற்கிணங்க அதனுடைய நியாயப் பெறுமதிகளில் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(இ) **எல்கேஏஎஸ்- 08 - கணக்கீட்டுக் கொள்கைள், கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தவறுகளிலுள்ள மாற்றங்கள்**
சீபீயின் பணிப்பாளர் சபையில் நிறுவன கொள்கை தீர்மானத்தை எடுக்காமல் மேலதிக பொது முகாமையாளர் (உற்பத்தி) ஆல் அறிவுறுத்தப்பட்டவாறு ரூபா 408,763,137 மற்றும் ரூபா 440,056,229 பெறுமதியான துணைப்பாகங்கள் முறையே செயற்பாடு செலவினங்கள் மற்றும் மூலதனச் செலவினங்களாக கணக்கீடு செய்திருந்தது. ஆகையால், அத்தகைய வகைப்படுத்தலிற்காக பிரயோகிக்கப்பட்ட அடிப்படையின் நியாயத்தன்மையினை கணக்காய்வில் ஏற்றுக்கொள்ள முடிந்திருக்கவில்லை. மேலும், வகைப்படுத்தலிற்காக பிரயோகிக்கப்பட்ட அடிப்படையும் நிதிக்கூற்றுக்களுடன் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

---

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) சீஈபீயானது லக் விஜயா மின்வலு நிலையத்துடன் தொடர்பான ரூபா 1,525,188,997 தொகையான 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டின் தொழிற்பாட்டு மற்றும் பராமரிப்புக் கிரயத்தை நிதிக்கூற்றுக்களில் மீள் குறிப்பிடுவதற்கு பதிலாக மீளாய்வாண்டிற்கான செலவீனமாக பதிவு செய்தது. ஆகையால், மீளாய்வாண்டின் போது சீஈபீயின் நட்டமானது அதே தொகையால் அதிகரித்துக்காட்டப்பட்டிருந்தது.

(ஆ) சீஈபீயின் ஓய்வூதிய நிதியத்தால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 403,717,966 தொகையான முதலீட்டையும் அதற்கான ரூபா 51,399,687 தொகையான வட்டியையும் அறவிடுதலானது அத்தகைய நிதிக்கருவிகள் இல்லாமையால் சந்தேகத்திற்குரியதாகவுள்ளது. எனினும், இது தொடர்பிலான எந்தவித சீராக்கல்களும் ஏற்பாடுகளும் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிக்கவில்லை

(இ) மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சிற்கு சொந்தமான ஆறு வாகனங்களை சீபீஈயின் சொத்துக்களாக கணக்கீடு செய்தமையால் ஆதனம், பொறி மற்றும் உபகரணம்(பீபீஈ) மற்றும் அதற்கான பெறமானத்தேய்வு முறையே ரூபா 46,884,422 மற்றும் ரூபா 6,697,775 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. ஆகையால் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பீபீஈ மற்றும் மீளாய்வாண்டிற்கான நட்டம் முறையே அத்தொகையால் அதிகரித்துக்காட்டப்பட்டிருந்தது.

(ஈ) முன்னைய வரிசை அமைச்சாகவிருந்த எரிசக்தி அமைச்சிற்கு விடுவிக்கப்பட்ட ரூபா 3,542,566 கிரயமான பத்து வாகனங்கள் பல ஆண்டுகளிற்கு முன்பிலிருந்து இடந்தவறியிருந்தது. இருந்தபோதிலும், அத்தகைய வாகனங்கள் துரித நடவடிக்கை எடுக்கப்படாமல் சீஈபீயின் கணக்குப் புத்தகங்களிலிருந்தது.

(உ) ரூபா 223,211,703 வரவு மீதியும் (இருப்பு பற்றாக்குறை) மற்றும் ரூபா 18,143,015 செலவு மீதியும் (மிகை (இருப்பு) ஆண்டொன்றிக்கு மேலாக தீர்க்கப்படாமல் இருப்பு சீராக்கல் கணக்கிலிருந்தது. அதன் விளைவால், மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட நடைமுறைச் சொத்துக்கள் ரூபா 205,068,688 ஆல் அதிகரித்துக்காட்டப்பட்டிருந்தது.

(ஊ) வெளிநாட்டு தேவைப்பட்டியலுடன் தொடர்பான ரூபா 224,554,623 தொகையான தரகு, தீர்ப்பனவு கட்டணங்கள், ஏனையவை போன்ற செலவீனம் உரிய செலவீனம் அல்லது சொத்து கணக்குகளிற்கு உறிஞ்சாமல் லக்விஜயா மின்வலு நிலையத்தின் வழிச்சரக்குகள் கணக்கில் ஆண்டொன்றிற்கு மேலாக இருந்தது.

### 2.2.2.3 இணக்கஞ்செய்யப்படாத வித்தியாசங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சீஈபீயின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 12,434,413,663 தொகையான செலுத்த வேண்டிய மீதிக்கும் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் (சீபிசீ) நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட நேரொத்த ரூபா 13,223,722,007 தொகையான பெறவேண்டிய மீதிக்கும் இடையில் ரூபா 789,308,344 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

இது தொடர்பில் சீஈபீயின் தலைவர் பின்வருமாறு அறிக்கையிட்டிருந்தார்.

***2013 செப்தெம்பர் 30 இல் திறைசேரிச் செயலாளரால் நடாத்தப்பட்ட கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம், 2013 ஏப்ரல் 20 இலிருந்து செயற்படுகின்ற வகையில் தாமதமான பற்றுச்சீட்டுப் பெறுமதியின் (கடன் காலத்திற்கு அப்பால்) மீதான வட்டியைச் செலுத்துவதற்கு தீர்மானித்திருந்தது. எனினும், ரூபா 753,610,829 தாமத வட்டிக் கொடுப்பனவு சீஈபீயால் 2013 ஏப்ரல் 20 இற்கு முன்னரான எரிபொருள் கொள்வனவுடன் தொடர்புபட்டிருந்தது. ஆகையால், இதற்கு சீஈபீ பொறுப்பில்லாததால் இந்த வித்தியாசத்தை இணக்கஞ்செய்வதற்கு வேண்டப்பட்டிருக்கவில்லை.***

(ஆ) மீளாய்வாண்டிற்கான பட்டியல் முறைமை மற்றும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த மற்றும் சாதாரண கடன்பட்டோர்களின் மீதிகளுக்கிடையில் ரூபா 423,369,454 கூட்டுத்தொகையான இணக்கஞ்செய்யப்படாத வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டன. மாதிரிக் கணக்காய்வில், பட்டியல் முறைமையில் உள்ளடக்கப்பட்ட இறுதியாக்கப்பட்ட வியாபார கடன்பட்டோர்களின் சில மீதிகள் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட கடன்பட்டோர் மீதிகளில் உள்ளடக்கப்பட்டிருக்காததுடன் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட இறுதியாக்கப்பட்ட வியாபாரக் கடன்பட்டோர்களின் சில மீதிகள் பட்டியல் முறைமையில் காட்டப்பட்ட கடன்பட்டோர் மீதிகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) லங்கா கோல் கம்பனியின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சீஈபீயிடமிருந்து பெற வேண்டிய தேறிய தொகை ரூபா 143,351,210 ஆகவிருந்தது. எனினும், செலுத்த வேண்டியவையாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட அதற்கு நேரொத்த தொகை ரூபா 1,435,642,785 ஆகவிருந்தது. ஆகையால், அத்தகைய இரண்டு தொகைகளுக்கிடையில் ரூபா 1,292,291,575 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

(ஈ) எல்ரிஎல் கோல்டிங்ஸ் இன் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வரையறுக்கப்பட்ட ஹெலதவி கம்பனிக்கு செலுத்த வேண்டிய மீதி ரூபா 270,498,308 ஆகவிருந்தது. எனினும், மீளாய்வாண்டிற்கான ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களில் இது ரூபா 330,071,158 ஆக காட்டப்பட்டது. ஆகையால், அத்தகைய மீதிகளிற்கிடையில் ரூபா 59,572,850 விளக்கமளிக்கப்படாத வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

### 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 15,045,563,295 வியாபார கடன்பட்டோர்களில் மீதிகளில் சாதாரண மற்றும் மொத்த வழங்கல்கள் இரண்டுடனும் தொடர்புடைய ரூபா 3,196,567,076 மீதி ஒரு ஆண்டிற்கு மேலாக நிலுவையாகவிருந்ததுடன் அதில் ரூபா 1,770,191,480 தொகை ஐந்து ஆண்டுகளிற்கு மேலாக அறவிடாமல் நிலுவையாகவிருந்தது.

(ஆ) எல்ஈசீஓயிடமிருந்து பெற வேண்டிய ரூபா 46,548,248 தொகையானது போதிய அறவீட்டு நடவடிக்கைகள் எடுக்காமல் ஐந்து ஆண்டுகளிற்கு மேலாக நிலுவையாகவிருந்தது. ரூபா 2,280,397,073 கூட்டுத்தொகையான ஏனைய பெறவேண்டிய மீதிகள் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஐந்து ஆண்டுகளிற்கு மேலாக அறவிடப்படாதிருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| கடன்பட்டோரின் பெயர் | தொகை | விபரம் |
|---|---|---|
| | ரூபா. | |
| வரையறுக்கப்பட்ட வூட் குறூப் காஸ் ரேர்வின் கம்பனி | 8,264,352 | மேற்கு கடற்கரை மின்வலுப் பொறிக்கான நுழைவு வீதியை நிர்மாணிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவு |
| மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சு | 6,142,277 | கெறவலப்பிற்றிய இணைந்த மின்வலுப் பொறியின் திறப்பு விழாவிற்காக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவு |
| இலங்கை நிலைபெறுதகு எரிசக்தி அதிகாரசபை | 897,025,999 | நுண் நீர்மின் அபிவிருத்தியாளர்களுக்குச் சீஈபீயால் செலுத்தப்பட்ட கட்டணச் சீராக்கங்கள் |
| -வரையறுக்கப்பட்ட ஏஈஎஸ் கெலனிதிஸ்ஸ (தனியார்) கம்பனி | 1,368,964,445 | விலை வித்தியாசங்களின் கொடுப்பனவு மீது அறவிடப்படவேண்டிய தொகை |
| **மொத்தம்** | **2,280,397,073** | |

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

(அ) 1969 இன் 17 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை அதிகாரச்சட்டம்

(i) **47 (1) (ஆ) பிரிவு** – சீஈபீயினால் பெறப்பட்ட கடன்களை மீளச் செலுத்துவதற்காக பொதுத் திறைசேரியுடன் ஆழ்நிதியமொன்றை சீஈபீயானது ஸ்தாபித்து பேணலாம். ஒதுக்கமொன்று நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த போதும், ஆனால் அது 2000 ஆம் ஆண்டிலிருந்து நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வொதுக்கக் கணக்கில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 17,447 மில்லியனாகும்.

(ii) **47 (2) (அ) பிரிவு** – சீஈபீயின் அசையும் மற்றும் அசையாத ஆதனங்களிற்கான பெறுமானத்தேய்வை மேவுகை செய்வதற்காக சபையானது பொதுத் திறைசேரியுடன் பெறுமானத்தேய்வு ஒதுக்கமொன்றை ஸ்தாபித்து பேணலாம். எனினும், அத்தேவைப்பாட்டிற்கு முரணாக 2000 திசெம்பர் 31 வரை வருடந்தோறும் ரூபா 1 மில்லியன் தொகையினை மாற்றீடு செய்து அதனது நிதிக்கூற்றுக்களில் பெறுமானத்தேய்வு ஒதுக்கமொன்றை சீஈபீயானது ஏற்படுத்தியிருந்ததுடன் அதன் பின்னர் எவ்வித நகர்வும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அத்திகதியில் திரண்டிருந்த ரூபா 23 மில்லியன் தொகை வருடாந்த நிதிக்கூற்றுக்களில் எவ்வித மீளாய்வுமின்றி தொடர்ச்சியாக முன்கொண்டுவரப்பட்டிருந்தது.

(iii) **47 (2) (ஆ) பிரிவு** – சீஈபீயின் நிதி ஸ்திரத்தன்மையினை உறுதிசெய்து வருமான பணத்திலிருந்து அதன் மூலதன வேலைகளிற்கு நிதியளிக்கும்

நோக்கத்திற்காகவும் சீஈபீ காலத்திற்குக் காலம் தீர்மானிக்கும் அவ்வாறான ஏனைய நோக்கத்திற்காகவும் சீஈபீ பொதுத் திறைசேரியுடன் பொது ஒதுக்கமொன்றை ஸ்தாபித்து பேணலாம். எவ்வாறாயினும், அத்தேவைப்பாட்டிற்கு முரணாக, சீஈபீ அதனது நிதிக்கூற்றுக்களில் ஏனைய மூலதன ஒதுக்கமொன்றை ஏற்படுத்தியிருந்ததுடன் ஆனால் இது 2000 ஆம் ஆண்டு முதல் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. அந்த ஒதுக்கக் கணக்கில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 165.45 மில்லியனாகும்.

(iv) **1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் II ஆம் பகுதியின் பிரிவு 46 மற்றும் 11 (அ) மற்றும் (ஆ) பிரிவுகள்** - அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளிற்கு முரணாக 1989 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு ஆண்டு முடிவிலும் உள்ளவாறான மொத்த நிலையான சொத்துக்களின் மொத்தப் பெறுமதியின் 0.1 சதவீத பங்களிப்பாக காப்புறுதி பாதுகாப்பு நிதியத்தில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 6,496 மில்லியன் தொகையான அதன் நிதிகளை சீஈபீ முதலீடு செய்திருந்தது.

(ஆ) சீபீயானது 2009 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சாரசபை அதிகாரச் சட்டத்தின் 28(3) ஆம் பிரிவின் பிரகாரம் நுகர்வோர் வைப்பிற்கான வட்டியை செலுத்தவேண்டியிருக்காததுடன் இலங்கை பொது பயன்பாட்டு ஆணைக்குழுவால் அறிக்கையிடப்பட்ட வீதத்தை அடிப்படையாக கொண்டு கணக்காய்வாளரால் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீடுகளின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டிற்கான நுகர்வு வைப்புக்களிற்கான வட்டியானது ரூபா 800 மில்லியனாக இருந்தது.

(இ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காப்புறுதி ஒதுக்க நிதியமத்துடன் தொடர்புடைய ரூபா 5,635 மில்லியன் தொகையொன்று சீபீயின் சுய-காப்புறுதி கொள்கையின் பிரகாரம் முதலிடப்பட்டிருக்கவில்லை. மேலும், அத்தகைய நியதி தேவைப்பாடுகளை அமுல்ப்படுத்துவதற்காக முறையான நிதி முகாமைத்துவம் செயற்பாட்டிலிருக்கவில்லை.

## 3. நிதிசார் மீளாய்வு

## 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான சீஈபீயினதும் தொகுதியினதும் தொழிற்பாடுகள் முன்னைய ஆண்டின் முறையே ரூபா 19,409 மில்லியன் மற்றும் ரூபா 23,943 மில்லியன் வரிக்கு முன்னரான தேறிய இலாபத்திற்கு எதிராக முறையே ரூபா 13,234 மில்லியன் மற்றும் ரூபா 10,439 மில்லியன் வரிக்கு முன்னரான தேறிய நட்டத்தை விளைவித்திருந்தமையால் மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் முறையே ரூபா 32,643 மில்லியன் மற்றும் ரூபா 34,382 மில்லியன் பின்னடைவைக் காட்டுகின்றது. மீளாய்வாண்டின் போது நீர் மின் உற்பத்தி 29 சதவீதத்தால் குறைவடைந்தமையால் அனல்மின் மற்றும் நிலக்கரி மின்வலு உற்பத்தி செலவீனம் முறையே 96 சதவீதம் மற்றும் 14 சதவீதத்தால் அதிகரித்தமை நிதிசார் விளைவுகளில் ஏற்பட்ட இந்த முன்னேற்றத்திற்கு பிரதான காரணமாக பங்களித்திருந்தது.

எனினும், ரூபா 65,467 கூட்டுத்தொகையான தனியார் வேதனங்கள், வரிச் செலவீனம் மற்றும் பெறுமானத்தேய்வை கணக்கிற்கு எடுத்ததன் பின்னரான மீளாய்வாண்டிற்கான குழுவின் பெறுமதிச் சேர்க்கை ரூபா 62,901 மில்லியனாக இருந்ததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது இது 25,916 மில்லியனால் அல்லது 29 சதவீதத்தால் குறைவடைந்தது.

## 3.2 பகுப்பாய்வுரீதியான நிதிசார் மீளாய்வு

--------------------------------------------------------------------------------

### 3.2.1 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

--------------------------------------------------------------------------------

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான குழுவின் தொழிற்படு மூலதனம் ரூபா 16,031 மில்லியன் ஆகும். எனினும், முன்னைய ஆண்டில் இது 32,736 மில்லியனாகவிருந்தது. ஆகையால் இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 51 சதவீதத்தால் பின்னடைவிலிருந்தது. வியாபார கடன்கொடுத்தோர்கள் ரூபா 32,616 மில்லியனால் அதிகரித்தமை இந்த பின்னடைவிற்கான பிரதான காரணமாகவிருந்தது.

### 3.2.2 உரிமையாண்மை மூலதனத்திற்கான கடன் மூலதனம்

--------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான தேறிய நட்டத்தால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது குழுவின் உரிமையாண்மை 4 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. மேலும், 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு குழுவினால் ஈடுபடுத்தப்பட்ட மொத்த மூலதனத்தின் முற்பது சதவீதம் அல்லது ரூபா 234.52 பில்லியன் கடன்களினூடாக நிதியிடப்பட்டிருந்தது. அதன் விளைவால், குழுவின் உரிமையாண்மைக்கான கடன் விகிதம் முன்னைய ஆண்டிலிருந்த 0.48 சதவீதத்திலிருந்து மீளாய்வாண்டில் 0.51 சதவீதத்திற்கு அதிகரித்திருந்தது.

### 3.2.3 இலாபத்தன்மை

--------------------------------

2015 ஆம் ஆண்டிற்கான ரூபா 15.01 ஆன சராசரி அலகுக் கிரயத்துடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் இது ரூபா 18.06 ஆக இருந்ததுடன் ரூபா 16.18 சராசரி விலையில் விற்கப்பட்டது. (முன்னைய வருட சராசரி விற்பனை விலை அலகொன்றிற்கு ரூபா 16.00 ஆக இருந்தது.) அதற்கிணங்க, மீளாய்வாண்டின் அலகொன்றுக்கான மொத்த இலாபம் ரூபா 1.88 ஆக இருந்ததுடன் அலகொன்றுக்கான ரூபா 0.99 ஆன முன்னைய வருட சராசரி மொத்த இலாபத்துடன் ஒப்பிடும் போது இது 298 சதவீத குறைவாகவிருந்தது. பின்வரும் அட்டவணையானது கட்டண வகைப்படுத்தலையும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் விநியோகிக்கப்பட்ட மின்சாரத்தின் அலகொன்றிற்கான (கேடபிள்யூஎச்) பங்களிப்பையும் காட்டுகின்றது.

| **வகை** | **அலகொன்றிற்கான (கேடபிள்யூஎச்)** | **பங்களிப்பு** |
|---|---|---|
| | **2016** | **2015** |
| | **ரூபா.** | **ரூபா.** |
| உள்நாடு | (4.64) | (2.13) |
| மதத்தலங்கள் | (10.91) | (7.88) |
| பொது நோக்கம் | 5.84 | 8.93 |
| கைத்தொழில் | (3.43) | 2.74 |
| அரசாங்கம் | 0.28 | (0.24) |
| ஹொட்டல்கள் | (0.32) | 3.32 |
| வீதி விளக்குகள் | (18.06) | (15.01) |
| எல்ஈசீஓ இற்கான விற்பனைகள் | (2.29) | 0.42 |
| **பங்களிப்பு** | **(1.88)** | **0.99** |

இதற்கமைய, பொது நோக்கம் மற்றும் அரசாங்கத்தின் கட்டண வகைப்படுத்தல் மீளாய்வாண்டின் மொத்தப் பங்களிப்பிற்கு சாதகமான பங்களிப்பாளராகவிருந்தனர். கைத்தொழில் மற்றும் உள்நாட்டு வகைப்படுத்தல் மீதான கட்டணம் மீளாய்வாண்டிற்கான

மொத்தப் பங்களிப்புக்கு அதிகூடிய எதிர்மறைப் பங்களிப்பாளராக இருந்ததுடன் உள்நாட்டு, மதத்தலங்கள் கைத்தொழில், ஹொட்டல்கள், மற்றும் எல்ஈசீஓ இற்கான விற்பனைகள் மீதான கட்டணமும் அதற்குரிய சாதகமற்ற பங்களிப்பை காட்டியிருந்தது.

**3.3 வழமைக்குமாறான கொடுக்கல்வாங்கல்கள்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஊழியர்களிற்குரிய உழைக்கும் போதே செலுத்தும் வரிப்பொறுப்பை ஊழியர்களிற்கே மாற்றுவதற்கு 2007 திசெம்பர் 13 இல் சம்பள சீராக்கலின் போதும் 2015 மே 20 இல் கூட்டு உடன்படிக்கையினை கருத்திற் கொள்ளும் போதும் அமைச்சரவையால் தீர்மானம் எடுக்கப்பட்டது. எனினும், அமைச்சரவையால் எடுக்கப்பட்ட மேற்குறிப்பிட்ட தீர்மானத்தை மீறுவதன் மூலம் சீஈபீயால் 2010 இலிருந்து 2016 வரை உரிய ஊழியர்களின் சம்பளங்களிலிருந்து கழிக்காமல் அதனுடைய சொந்த நிதியிலிருந்து செலுத்தப்பட்ட 2,617,839,903 உழைக்கும் போதே செலுத்தும் வரியை சீஈபி செலுத்தியது.

2001 மே 20 ஆந் திகதிய 1706/18 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தால் குறித்துரைக்கப்பட்ட காசற்ற நலன்களின் பெறுமதி ஒவ்வொரு ஊழியர்களின் உழைக்கும் போதே செலுத்தும் வரியை கணிப்பிடும் போது கருத்திற்கொள்ளப்பட வேண்டியிருந்தது. எனினும், தனியார் பயன்பாட்டிற்கான விடுதிகள், குடியிருப்புக்கள் மற்றும் மோட்டார் வாகனங்கள் போன்ற ஏற்பாடுகளிற்கான காசற்ற நலன்களை சீஈபீ கணக்கிலெடுத்திருக்கவில்லை.

(ஆ) 2007 நவம்பர் 14 இல் அமைச்சரவையினால் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு முரணாக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் மீது சீஈபீயின் உத்தியோகத்தர்களுக்கு காலத்திற்கு காலம் வேறுபட்ட உத்தியோகத்தர் படிகள் செலுத்தப்பட்டிருந்ததுடன் 2015 இல் செலுத்தப்பட்ட ரூபா 1,144 மில்லியனான அத்தகைய படிகளுடன் ஒப்பிடும் போது 2016 ஆம் ஆண்டில் ரூபா 1,222 மில்லியன் தொகையான படிகள் செலுத்தப்பட்டிருந்தமை கணக்காய்வு தெரிவுச் செவ்வையின் போது வெளிப்பட்டிருந்தது.

(இ) 1998 மார்ச் 08 ஆந் திகதிய 130 ஆம் இலக்க அரச முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் 10 சதவீதம் முதல் 14 சதவீதம் வரையான வட்டி வீதத்தில் உத்தியோகத்தர்களுக்கு வாகனக் கடன்களை வழங்குவதற்குப் பதிலாக சபை 4.2 சதவீத வட்டி வீதத்தில் அத்தகைய கடன்களை வழங்கியிருந்தது. மேலும், சீஈபீ பல திரவ பிரச்சனைகளை சந்திக்கின்ற போதிலும் கட்டுப்பாடுகள் எதுவுமின்றி உத்தியோகத்தர் கடன்கள் செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**3.4 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

---

சீஈபீயின் வெளிநாட்டு நிதியப்பட்ட செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக கொடுக்கப்பட்ட நிதியங்கள் உரிய காலத்தில் முறையாக பயன்படுத்தாமையால் கொடுக்கப்பட்ட கடன்களிலிருந்து 2016 ஆம் ஆண்டில் கடனளிக்கும் முகவரால் கடப்பாட்டுக் கட்டணங்களாக ரூபா 59,750,592 தொகை கழிக்கப்பட்டிருந்தது.

**3.5 சர்ச்சைக்குரிய தன்மையிலான விடயங்கள்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சீஈபீயானது பல வருடங்களாக மின்சாரத்தை எல்ஈசீஓ இற்கு விற்பனை செய்வதுடன் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடமிருந்து எரிபொருளை கொள்வனவு

செய்கின்ற போதிலும் தனிப்பட்ட நிறுவனங்களின் சுமூக செயற்பாடுகளிற்காக அத்தகைய இரு தரப்பினர்களிற்குமிடையில் எந்தவித விற்பனை கொள்வனவு உடன்படிக்கைகளோ கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) லக்விஜயா மின்வலுப் பொறிக்காக 2016 ஆம் ஆண்டின் போது வரையறுக்கப்பட்ட லங்கா கோல் (தனியார்) கம்பனியால் நிலக்கரியை கொள்வனவு செய்கையில் இனங்காணப்பட்ட பாரிய சர்ச்சைகளிடமிருந்து சீபிசீக்கு ஏற்பட்ட விளைவு கீழே தரப்பட்டுள்ளவாறு பொழிப்பாக்கப்பட்டுள்ளது.

(i) நிலக்கரி பெறுகையின் மூல கூறுவிலை ஆவணங்களில் உள்ளடக்கப்பட்ட வரைபு உடன்படிக்கையானது நிலக்கரி வழங்குனர்களுடன் கம்பனியானது உடன்படிக்கைகளில் ஈடுபடும் போது திருத்தப்பட்டது. அதன்விளைவால், பரும பரிமான உள்ளடக்க விலகல்களிற்காக ரூபா 461,453,005 விலைத் தண்டப்பணங்களை அறவிட முடியாதிருந்தது.

(ii) நிலக்கரி விலையானது ஏற்றல் துறைமுகத்தில் வழங்கப்பட்ட தரப்பகுப்பாய்வு அறிக்கையின் அடிப்படையில் கருதுவதற்கு பதிலாக ஏற்றல் துறைமுகத்தால் வழங்கப்பட்ட தரப்பகுப்பாய்வு அறிக்கையின் பிரகாரம் விநியோகிக்கப்பட்டது. அதனால் வழங்குனர்களிற்கு பதிவழிக்கமுடிந்த ரூபா 170,189,090 நட்டத்தை கம்பனி ஏற்படுத்தியது.

(iii) 935,082 மெற்றிக்தொன் நிலக்கரியை கொள்வனவு செய்த 16 கப்பலேற்றல்களுக்கான ஏற்றுக்கொள்ளல் கடிதம் நங்கூர துறைமுகத்திற்கு கப்பல்கள் நங்கூரமிடுவதற்கு முன்னர் வழங்கப்பட்டது. ஆகையால், துறைமுகத்திற்கு நங்கூரமிடுவதிலிருந்து நிலக்கரி பகுப்பாய்வு அறிக்கைகளை பெறுவதற்கு முன்னர் கொடுப்பனவுகள் விடுவிக்கப்பட்டிருந்தது.

**3.6 முகாமைத்துவ நடவடிக்கைகள்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்பாட்டு கையேடு (மாகாணம்) மற்றும் எல்லை இலத்திரனியல் கையேடு, ஏனையவை போன்ற திருத்தப்பட்ட கையேட்டிற்காக இயக்குனர் சபையின் அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2005 இல் ரூபா 18,254,550 இற்காக கொள்வனவு செய்யப்பட்ட 35 வருடங்கள் பயன்தரு பொருளாதார ஆயுட்காலத்துடனான இரண்டு நிலைமாற்றிகள் பெறுகை செய்முறையில் இனங்காணமுடிந்த குறுகிய சுற்று நிபந்தனைகளுடன் இவை இல்லாமையால் 5-7 வருடங்களில் செயற்படவில்லை. எனினும், இது தொடர்பில் விசாரனை செய்வதற்கு எந்த வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2014 செப்தெம்பர் 11 இல் ரூபா 7,221,707 கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட மூவாயிரம் பொருத்தும் கருவிகள் (பின் 33 கேவி) தரப் பிரச்சினையால் பயன்படுத்தப்படாதிருந்ததுடன் அது மீளமைக்காமல் 2018 சனவரி 31 இல் உள்ளவாறு களஞ்சியங்களில் விளைவற்றிருந்தது. இது தொடர்பில் பெறப்பட்ட செயலாற்றல் முறியின் செல்லுபடியாகும் காலம் 2016 பெப்ரவரி 26 இல் காலங்கடந்திருந்தது.

(ஈ) 2017 ஏப்ரல் 17 அளவில் இறுதியாக்கப்பட்ட உத்துவ வாசன்தயா செயற்திட்டத்தின் கீழ் 2014 இன் இனங்காணப்பட்ட ரூபா 52,550,929 இருப்பு பற்றாக்குறை தொடர்பில் உள்ளக கணக்காய்வு பிரிவால் விஷேட புலனாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. எனினும், இந்த பற்றாக்குறைக்கு பொறுப்பாகவுள்ள உத்தியோகத்தர்களுக்கு எதிராக 2018 சனவரி 31 இலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், இது தொடர்பில் 2015 இல் குற்றப்

புலனாய்வு திணைக்களத்தால் திருகோணமலை நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு (வழக்கு இலக்கம் பீ/1164/15) தொடரப்பட்டிருந்தது. எனினும் நீதிமன்ற வழங்கிய தீர்ப்பின் தற்போதைய நிலைமை தொடர்பிலான தகவல்கள் கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

(உ) ரூபா 5,821,247 பெறுமதியான இடர், போக்குவரத்து, பண்டிகை முற்பண மற்றும் விஷேட முற்பணம் போன்ற உத்தியோகத்தர் கடன்கள் அறவீட்டு நடவடிக்கை எதுவும் எடுக்காமல் 05 ஆண்டுகளிற்கு மேலாக நிலுவையாகவிருந்தது.

## 3.7 மனித வளங்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சீஈபீயின் ஆட்சேர்ப்புத் திட்டம் (எஸ்ஓஆர்) நீண்டகாலமாக நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மனித வளப் பிரிவிலுள்ள பிரதான பதவியாக பிரதிப் பொது முகாமையாளர் (ஆளணி) உள்ளபோதிலும் அப்பதவிக்கு தேவையான தகைமைகள் மற்றும் அனுபவங்கள் ஆட்சேர்ப்புத் திட்டத்தில் (எல்ஓஆர்) நிச்சயிக்கப்படாதிருந்ததுடன் மின்னியல் பொறியியலாளர்கள் போன்ற ஏனைய சேவையிலுள்ளோரும் இப்பதவியணியை பெற்றுக்கொள்வதற்கு இயலுமான முறையில் இருந்தது.

(இ) தற்போதுள்ள ஆட்சேர்ப்புத் திட்டத்தின் பிரகாரம், மொத்த மனித வள உத்தியோகத்தர் (எல்ஆர்ஓ) பதவியணியில் 50 சதவீதமானவை வெளியிலிருந்து நிரப்பப்படுவதுடன் அதனை ஒவ்வொரு ஆண்டிலும் படிப்படியாக அதிகரித்து 85 சதவீதம் வரை உயர்த்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், சீஈபீயின் வரலாற்றில் இரண்டு பொறியிலாளர்கள் பிரிவுகளின் தொழிற்பாடுகளிற்கு நீண்ட காலமாக தலைமைதாங்கி செயற்பட்டு வருவதனால் ஆட்சேர்ப்புத் திட்டத்தில் அவ்வாறு வெளிவாரியாக ஆட்சேர்ப்புச்செய்யப்பட்ட ஊழியர்களிற்கு தெளிவான பதிவியுயர்த்தல் பாதையொன்று இருப்பது அவதானிக்கப்படவில்லை.

(ஈ) மனித வள முகாமையாளர் (எச்ஆர்எம்) மற்றும் மனித வள உத்தியோகத்தர் (எச்ஆர்ஓ) போன்ற பதவிகளிற்கு நேரடி ஆட்சேர்ப்பிற்குத் தேவையான அனுபவமானது 100 ஊழியர்களிற்கு மேற்பட்ட நிறுவனமொன்றில் மனிதவளத் துறையில் 06 ஆண்டுகளாக இருக்கின்றமை சீஈபீயில் கையாளப்பட வேண்டிய பதவியணிப் பலத்துடன் ஒப்பிடுகையில் அது போதுமானதல்ல.

# 4 செயற்பாட்டு மீளாய்வு

## 4.1 செயலாற்றல்

### (அ) மின்வலு உற்பத்தி மற்றும் நேர்க்கிரயம்

முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டிற்கான மின்வலு உற்பத்தி மற்றும் மின்சார உற்பத்தி மற்றும் மின்வலுக் கொள்வனவுகளுக்காக ஏற்பட்ட நேர்க்கிரயங்களின் பொழிப்பினை பின்வரும் அட்டவணைகள் காட்டுகின்றன.

**(i) மின்வலு உற்பத்தி**

| மூலம் | மீளாய்வாண்டின் போதான தேறிய மின்வலு உற்பத்தி | | அதிகரிப்பு / (குறைவு) | |
|---|---|---|---|---|
| | 2016 | 2015 | | |
| | ஜிடபிள்யூஎச் | ஜிடபிள்யூஎச் | ஜிடபிள்யூஎச் | சதவீதம் |
| நீர்மின் | 4,220 | 5,969 | (1,749) | 29 |
| அனல்மின் | 4,461 | 2,275 | 2,186 | 96 |
| நிலக்கரி | 5,047 | 4,443 | 604 | 14 |
| மாற்றமடையாத புதுப்பிக்கத்தக்க சக்தி | 421 | 402 | 19 | 5 |
| **மொத்தம்** | **14,149** | **13,089** | **1,060** | **8** |

அதற்கிணங்க, நாட்டில் நிலவிய வறட்சியால் நீர்மின்வலு உற்பத்தி 1,749 ஜீடபிள்யூஎச் ஆல் குறைவடைந்தமையால் 2016 ஆம் ஆண்டில் சுயாதீன வலு உற்பத்தியாளர்களிடமிருந்து அனல் மின் கொள்வனவிற்காக சீஈபீயானது ரூபா 22,682 மில்லியன் குறிப்பிட்ட தொகையை செலுத்தியது. நிலக்கரி மின்வலு உற்பத்தி 604 ஜீடபிள்யூ ஆல் அதிகரித்திருந்த போதிலும், நிலக்கரியின் விலைகள் குறைவடைந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது கிரயமானது ரூபா 437 மில்லியனால் குறைவடைந்திருந்தது.

**(ii) நேரடிக்கிரயம்**

| விடயம் | 2016 | | 2015 | |
|---|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | சதவீதம் | ரூபா மில்லியன் | சதவீதம் |
| எரிபொருள் | 50,074 | 28 | 23,114 | 18 |
| - மின்வலு கொள்வனவு | 81,752 | 46 | 63,732 | 48 |
| - நிலக்கரி | 20,204 | 11 | 20,641 | 16 |
| - செயற்பாடு மற்றும் பராமரிப்பு | 12,083 | 7 | 10,771 | 8 |
| - பெறுமானத்தேய்வு | 14,797 | 8 | 13,792 | 10 |
| **நேர்க்கிரயம்** | **178,910** | **100** | **132,050** | **100** |

மேற்கூறப்பட்ட தகவல்களிற்கிணங்க 2016 ஆம் ஆண்டிற்கான மின்வலு கொள்வனவுகள் மற்றும் உற்பத்தியின் நேரடிக் கிரயம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 46,860 மில்லியனால் அல்லது 35 சதவீதத்தால் அதிகரித்தது. மேலும், மின்வலு கொள்வனவு உடன்படிக்கைகளிலுள்ள நிபந்தனைகளின் பிரகாரம் மின்வலு உற்பத்தியின் நிலையான கிரயம் தவிர்க்க முடியாததால் பொது மக்களுக்கு குறைந்த கிரயத்தில் மின்வலுவினை வழங்குதல் என்ற சஈபீயின் முக்கிய நோக்கத்தில் ஒன்றை அடையமுடியாதிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 சமூக பொறுப்புகள்

சீஈபீயானது மீளாய்வாண்டின் போது லக்விஜயா மின்வலு நிலையத்துடன் தொடர்புடைய சூழல் சர்ச்சைகளிற்கான நட்டஈடாக ரூபா 12,526,000 ஐ செலுத்தியது. மேலும், சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் (ஈபிஎல்) 2017 யூலை இலிருந்து மாகாண சூழல் பாதுகாப்பு அதிகாரசபையால் வழங்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான கணக்கு விடயங்களிற்கிடையில் முக்கியமான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது முகாமைத்துவக் கட்டுப்பாட்டின் வினைத்திறனான கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லையென வெளிக்காட்டுகின்றது.

## 6 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் காலத்திற்குக்காலம் சீஈபீயின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| (அ) | சொத்துக்கள் முகாமைத்துவம் | (i) விநியோகப் பிரிவிலுள்ள மூலதன வேலைகளினை பூர்த்தி செய்வதிலுள்ள நீண்டகால தாமதம் |
| | | (ii) நாடாளவிய ரீதியில் அமைந்துள்ள சீபிசீயின் காணிகளின் அளவை மதிப்பீடு மற்றும் பாதுகாப்பை துரிதப்படுத்தல் |
| | | (iii) வாகனங்களிற்கான நாளதுவரையாக்கப்பட்ட தரவுத் தளத்தின் பராமரிப்பு |
| (ஆ) | பெற வேண்டியவைகள் மற்றும் செலுத்த வேண்டியவைகள் | (i) கடன்பட்டோர் மற்றும் ஏனைய வருமதிகளை உரிய காலத்தில் அறவிடுதல். |
| | | (ii) மொத்த வழங்கல் மீதான பிணை வைப்புக்களை உரிய காலத்தில் நாளதுவரையாக்குதல். |
| (இ) | மனிதவளங்கள் முகாமைத்துவம் | நிறுவனத்தின் நோக்கங்களை அடைவதற்கான பங்கு மற்றும் அளவின் பிரகாரம் மனித வளங்களின் முகாமைத்துவம் |
| (ஈ) | பெறுகை | (i) கட்டுப்பாட்டு கருவியாக பயன்படுத்துவதற்கு பொருந்தக்கூடிய வகையில் பெறுகைத் திட்டத்தை தயாரித்தல். |

| | | | |
|---|---|---|---|
| | | (ii) | நட்டங்களை குறைப்பதற்கும் நிலக்கரியின் தரத்தினை பேணுவதற்கும் நிலக்கரி கொள்வனவு செய்முறையை வலுப்படுத்தல். |
| (உ) | இருப்புக் கட்டுப்பாடு | (i) | இருப்புப் பதிவேடுகளை முறையாக பேணுதல் |
| | | (ii) | இரும்பு பற்றாக்குறையை தவிர்ப்பதற்கு நிலக்கரி இருப்பு கையாளல் மீது பொருத்தமான கட்டுப்பாடுகளை தாபித்தல் மற்றும் பராமரித்தல். |
| (ஊ) | செயற்திட்ட முகாமைத்துவம் மற்றும் கட்டுப்பாடு | (i) | செயற்திட்ட நடவடிக்கைகளுக்காக உள்ள கணக்காய்வை நடாத்தல் |
| | | (ii) | பொறியியல் பாதீட்டை பொருத்தமானதாக பேணுதல் |
| (எ) | முதலீடுகள் மற்றும் துணைக்கம்பனிகள் மீதான கட்டுப்பாடு | | தலைமைக் கம்பனியானது முதலீடுகள் மீதான திரும்பலை அதிகரிப்பதற்கு முதலீடுகள் மீதான கட்டுப்பாட்டை பேணுதல் வேண்டும். |